# அக்டோபர் – 29 – திங்கள்

## புனித நர்சிசியுஸ்

## நற்பேறு பெற்றவர் யார்? - திபா. 1:1

## முதல் வாசகம் : ஏபேசியர் 4 : 32 --- 5 : 8

சகோதர சகோதரிகளே!,ஒருவருக்கொருவர் நன்மைசெய்து பரிவு காட்டுங்கள் கடவுள் உங்களைக் கிறிஸ்து வழியாக மன்னித்ததுபோல நீங்களும் ஒருவரை ஒருவர் மன்னியுங்கள்.ஆகவே நீங்கள் கடவுளின் அன்பார்ந்த பிள்ளைகளாய் அவரைப்போல் ஆகுங்கள். கிறிஸ்து உங்களுக்காகத் தம்மை நறுமணம்வீசும் பலியும் காணிக்கையுமாகக் கடவுளிடம் ஒப்படைத்து உங்களிடம் அன்பு கூர்ந்ததுபோல, நீங்களும் அன்புகொண்டு வாழுங்கள்.பரத்தைமை, அனைத்து ஒழுக்கக்கேடுகள், பேராசை ஆகியவற்றின் பெயர்கூட உங்களிடையே சொல்லப்படலாகாது. இதுவே இறைமக்களுக்கு ஏற்றநடத்தை.அவ்வாறே, வெட்கங்கெட்டசெயல், மடத்தனமான பேச்சு, பகடி பண்ணுதல் ஆகியவை தகாதவை. நன்றி சொல்லுதலே தகும்.ஏனெனில் பரத்தைமையில் ஒழுக்கக்கேடாக நடப்போர், சிலை வழிபாடாகிய பேராசை கொண்டோர் போன்ற எவரும் கிறிஸ்துவுக்கும் கடவுளுக்கும் உரிய அரசில் உரிமைப்பேறு அடையார் என்பதை நீங்கள் அறிந்து கொள்ளுங்கள்.வீண் வார்த்தைகளால் உங்களை யாரும் ஏமாற்றவிடாதீர்கள். ஏனெனில் மேற்கூறிய செயல்களால்தான் கீழ்ப்படியாத மக்கள்மீது கடவுளின் சினம் வருகின்றது.எனவே அவர்களோடு நீங்கள் எதிலும் பங்குகொள்ள வேண்டாம்.ஒருகாலத்தில் இருளாய் இருந்த நீங்கள் இப்போது ஆண்டவரோடு இணைந்து ஒளியாய் இருக்கிறீர்கள். ஆகவே ஒளிபெற்ற மக்களாக வாழுங்கள்.

**பதில்பாடல் :** படைப்புக்களின் அறிக்கை உலகெங்கும் சென்றடைகிறது.

## நற்செய்தி : மாற்கு13 : 10 – 17

அக்காலத்தில் இயேசு தமது சீடர்களுக்குக் கூறியதாவது : எல்லா மக்களினத்தவர்க்கும் முதலில் நற்செய்தி அறிவிக்கப்பட வேண்டும்.அவர்கள் உங்களைக் கைதுசெய்து கொண்டு செல்லும்போது என்ன பேசுவது என நீங்கள் முன்னதாகவே கவலைப்பட வேண்டாம் அந்தநேரத்தில் உங்களுக்கு அருளப்படுவதையே பேசுங்கள். ஏனெனில் பேசுவோர் நீங்கள் அல்ல. மாறாக, தூய ஆவியாரே.மேலும் சகோதரர் சகோதரிகள் தம் உடன் சகோதரர் சகோதரிகளையும் தந்தை பிள்ளையையும் கொல்வதற்கு என ஒப்புவிப்பர் பிள்ளைகள் பெற்றோர்க்கு எதிராக எழும்பி அவர்களைக் கொல்வார்கள்.எனது பெயரின் பொருட்டு எல்லாரும் உங்களை வெறுப்பர். ஆனால் இறுதிவரை மன உறுதியுடன் இருப்பவரே மீட்புப் பெறுவர்."நடுங்க வைக்கும் தீட்டு" நிற்கக்கூடாத இடத்தில் நிற்பதை நீங்கள் காண்பீர்கள். படிப்பவர் இதைப் புரிந்துகொள்ளட்டும். அப்போது யூதேயாவில் உள்ளவர்கள் மலைகளுக்குத் தப்பி ஓடட்டும்.வீட்டின் மேல்தளத்தில் இருப்பவர் கீழே இறங்கவேண்டாம் தம் வீட்டினின்று எதையும் எடுக்க அதில் நுழையவும் வேண்டாம்.வயலில் இருப்பவர் தம் மேலுடையை எடுக்கத் திரும்பி வரவேண்டாம்.அந்நாள்களில் கருவுற்றிருப்போர், பாலூட்டுவோர் ஆகியோர் நிலைமை அந்தோ பரிதாபம்“! என்றார்.

**தியானம்:** “நான் செய்தது போன்று நீங்களும் ஒருவருக்கொருவர் அன்பு செய்யுங்கள், பரிவுகாட்டுங்கள் என்று இறைமகன் இயேசு எங்களுக்கு அழைப்பு விடுக்கின்றார். அதை அவர் வாழ்ந்த காலத்தில் எங்களுக்கு வாழ்ந்தும் காட்டியிருருக்கிறார். இன்றைய வாசகங்களும் அவர் உலகின் மேல் கொண்ட அன்பின் நிமித்தம் யாவற்றிலிமிருந்து எமக்கு விடுதலையை பெற்றுத்தந்தார் என்பதை வெளிப்படுத்தப்படுகின்றது. இயேசு எமது பாவங்களை மன்னித்து எங்களை ஏற்றுக் கொண்டது போன்று நாங்களும் மற்றர்களை மன்னித்து அன்புடன் ஏற்றுவாழ அழைக்கப்படுகின்றோம். “ஒருவருக்கொருவர் நன்மை செய்து பரிவுகாட்டுங்கள், கடவுள் கிறிஸ்துவழியாய் மன்னித்தது போன்று நீங்களும் மன்னியுங்கள்” (எபே.4:32) ஆனால் நாங்களோ மற்றவர்களை மன்னித்து ஏற்று வாழாமல் கூடாத பேச்சுக்களை பேசுதல், செய்யத்தகாத செய்களை செய்தல், இவ்வாறு கடவுளுக்கு விருப்பமற்றவகையில் செயல்படுகின்றோம். அவ்வாறு வாழ்ந்தோமானால் இறைவனோடு ஒன்றித்து வாழதவறிவிடுவோம். “வெட்கங்கெட்ட செயல், மடமைத்தனமான பேச்சு. பரத்தமை, பகடிஉகாத இவ்வாறான தீயவற்றிற்கு அடிமைப்பட்டு வாழ்ந்தோமானால் கடவுளுடைய அரசில் உரிமைப்பேறு அடையமுடியாது” (எபே.5:5) இவ்வாறு பார்க்கின்றோம். இன்று எங்கள் மத்தியிலும் இவ்வாறான அசுத்தங்களை தான் நிரம்பிக்கிடக்கின்றன. இவற்றிலிருந்து விடுபட இறையன்பில் நிலைத்திருப்போம், எங்களை நேசிப்பது போன்று அயலாரையும் நேசித்துவாழும் பொழுதுதான் இறைவனது அன்பையும் பெற்றுக்கொள்ளமுடியும். அன்று 18 ஆண்டுகளாக நிமிர்ந்து நடக்கமுடியாமல் கூன் விழுந்த நிலையில் இருந்த பெண்ணொருவரை இயேசு குணப்படுத்துகிறார். இதில் என்ன காண்கிறோமென்றால் அப்பெண் குணப்படுத்தும் படிகேட்கவில்லை மாறாக அவர் பேசுவதை மட்டுமே கேட்டுக்கொண்டிருந்தார். ஏனெனில் யார் யாரெல்லாம் தம்மைத் தேடி தனது விருப்பப்படி வாழ்கிறார்களோ அவர்களுக்கு நான் நிறைவாகக் கொடுப்பேன் என்பதை வெளிப்படுத்துகின்றார். எனவே நாங்கள் மற்றவர்களை மன்னித்து அன்புடனும், ஒற்றுமையுடனும் இறைவனுக்கு ஏற்றவகையில் வாழும் பொழுது இறைவன் எமக்கு என்னென்ன தேவைகள் இருப்பினும் அவை யாவற்றையும் எமக்கு தருவார் என்று விசுவசித்து வாழ்வோம்.